உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் சித்திரைத் திங்கள் ஏப்ரல் 2024 | பூமி–14



## யாழ்ப்பாணத்தில் உதயமாகவுள்ள கரு வளர்ச்சி சிகிச்சை நிலையம்



யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் சுமார் 800 இலட்சம் ரூபா பெறுமதியான தனது வீட்டினை நற்கருமங்களுக்காக, சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார். ஒரு பெரிய மனம் படைத்த மனிதர். யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலே மிகவும் புகழ்பூத்த செனட்டர் ஞசு கனகநாயகம் அவர்களின் சட்ட அலுவலகம் நடைபெற்ற வீடு, உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக முழுமையாக அழிவடைந்து விட்டது. அதன் பின்னர் அவருடைய மகள் வைத்தியர் பாலசுப்பிரமணியம் தம்பதியினர் இந்த வீட்டினை மிகவும் அழகாக கட்டினார்கள். அந்த வீட்டில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வாடகைக்கு இருந்தார். நான் சென்ற மே மாதம் அவுஸ்ரேலியாவிற்கு சென்ற சமயத்திலே வைத்தியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் என்னை அழைத்து

அப்பா சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக சிறப்பாக பணியாற்றியவர்.

சங்கரத்தையிலே எங்களது அப்பா எல்லா செல்வத்தோடும் இருந்தவர். பிள்ளைகளை நன்றாக வைத்திருக்கிறார். எங்கட தம்பிதான் ஜனாதிபதி சட்டத்தரனி கனகேஸ்வரன் அவரும் ஒரு குறைவின்றி வாழ்ந்து வருகின்றார். ஆறுதிருமுருகனுக்கு எங்கட யாழ்ப்பாணத்து வீட்டினை நன்கொடையாக கொடுப்பதென்று நாங்களும் பிள்ளைகளும் முடிவெடுத்திருக்கின்றோம். உங்களுடைய சம்மதத்தைப் பெற்று விட்டு திருமதி நீலகண்டனுக்கு காணி உறுதியை ஒப்படைக்கின்றோம் அவர்கள் உங்களுக்கு உறுதியை மாற்றி எழுதித் தருவார்கள் என அன்பாக தெரிவித்தார்கள்.

கனகேஸ்வரன் கொழும்பில் புகழ்பெற்ற சட்டத்தரணியாக பணியாற்றிவருகின்றார். நான் இலங்கைக்கு வருகை தந்ததும் அவருடன் தொலைபேசில் தொடர்பு கொண்டு உங்களுடைய அக்கா யாழ்ப்பாணத்து வீட்டினை எங்களுக்கு தருவதற்கு விரும்பம் தெரிவித்துள்ளார். உங்களுக்கு சேர வேண்டிய சொத்து உங்களுக்கு சம்மதம் என்றால் நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம் என தெரிவித்தேன். அதற்கு அவர் எங்கட அக்கா எல்லாம் சரியாகத்தான் சொல்லுவார் அவர் சொன்னால் எனக்கு எந்த மறுப்பும் இல்லை என பதில் தெரிவித்தார்.

இந்த வீட்டினை நாங்கள் பொறுப்பெடுத்து அதனை யாழ் மருத்துவமனைக்கு எதிர்வரும் 21ம் திகதி ஒப்படைக்கவுள்ளோம். எங்கள் யாழ்ப்பாணத்தில் குழந்தை செல்வம் பெற்றுக் கொள்ள இடர்களை எதிர்நோக்கியுள்ள எமது சகோதரிகளின் நன்மைக்காக கரு வளர்ச்சி சிகிச்சை நிலையம் அமைக்க யாழ் வைத்தியசாலைக்கு பெருமையுடன் நாங்கள் ஒப்படைக்கின்றோம். யாழ்ப்பாண வைத்தியசாலையும் சிவபூமியும் இணைந்து பெண்களுக்கான கரு வளர்ச்சி சிகிச்சையினை இலவசமாக வழங்கவுள்ளோம்.

எங்களுக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு நிலத்தினையும் இது போன்ற தர்ம காரியங்களுக்குதான் நாங்கள் பயன்படுத்துகின்றோம். இந் வீட்டினை வழங்கியவர்களுக்கு நான், நீங்கள் தந்த வீட்டினை நாங்கள் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு கரு வளர்ச்சி சிகிச்சை நிலையத்திற்கு வழங்கவுள்ளோம் உங்கள் கருத்து என்ன என்று கேட்டேன்... அதற்கு அவர்கள் ஆறுதிருமுருகன் உங்களுக்கு நாங்கள் வீட்டினைத் தந்துவிட்டோம் இனி உங்கட முடிவுதான் எங்களிடம் ஒன்றும் கேட்க வேண்டாம் என தெவித்தார்கள்.

தற்காலத்தில் இப்படியும் மனிதர்கள் வாழ்கின்றார்கள் என நினைக்கும் போது எவ்வளவு பெருமையாக உள்ளது. 11 அறைகள் 6 மலசல கூட வசதிகளுடன் நாங்கள் இந்த வீட்டினை யாழ் மக்களின் குழந்தை செல்வத்திற்காக மிகவும் மகிழ்வுடன் வழங்குகின்றோம்.

எனது பாடசாலை நண்பர் வைத்தியர் பார்த்தீபன் அவர்கள் அபயம் அறக்கட்டளை ஊடாக சிவபூமியின் மருத்துவப்

**ஆசிரியர்**
கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு. ச. சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு. வ. குணநீதன்







**பால் காய்ச்சும் நிகழ்வு**

அன்பளிப்பாக வழங்குகின்றார். ஆனைக்கோட்டை மயிலிட்டி, இயக்கச்சி, கண்டி ஆகிய இடங்களில் உள்ள எங்களது மருத்துவ நிலையங்கள் ஊடாக நடைபெறும் இலவச சேவைகளுக்காக எனது பாடசாலை நண்பர் இந்த உதவியை செய்கின்றார். கண்டியில் ஆசிரியர்களுக்கான உதவி, பிள்ளைகளுக்கான கல்வி உதவி என அனைத்திற்கும் எனது நண்பர் உதவு செய்கின்றார். இந்த செய்திகளை எல்லாம் நான் சொல்வதற்கு காரணம் எங்களுக்கு எப்படி பணம் வருகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்குதான்.

சிலர் எவ்வித அடிப்படையும் இல்லாது மிகவும் தரக்குறைவாக இணையங்களில் பொய்களை பரப்புகின்றார்கள். திருமுருகனுக்கு எப்படி பணம் வருகின்றது? ஏதோ கள்ள வழியில் வருகின்றது என மிகவும் தரக்குறைவாக எழுதுகின்றார்கள். பிழையான வழியில் ஒரு சதம் பணம் கூட எங்களுக்கு கிடையாது பிழையான வழியில் எங்களுக்கு கடவுள் உதவியும் செய்ய மாட்டார்.

நல்ல சிந்தனையுடன் எங்கள் பணிகளை பார்த்து பல பெரிய மனம் படைத்தவர்கள் எங்களுக்கு உதவி செய்கின்றார்கள் அவர்களின் உதவிகளைப் பெற்று நாங்கள் எங்கள் மண்ணிலே பணியாற்றுகின்றோம். புகழ்பெற்ற கணக்காய்வு நிறுவனத்தின் ஊடாக ஆண்டிற்கு நான்கு தடவைகள் எங்கள் நிதி நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து அதன் அறிக்கைகளை அரசாங்கத்திற்கு வழங்குகின்றோம். எங்கள் பணிகள் அனைத்தும் பல துன்பங்களை சுமந்து வாழ்கின்ற எங்கள் மக்களின் நன்மைக்காதான் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

***கலாநிதி. ஆறு.திருமுருகன்***
***சிவபூமி பத்திரிக்கை ஆசிரியர்***

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கால்கோள்

புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுவது வழமை. அந்த வகையில் இவ்வருடத்திற்கான புது முக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு 03.04.2024 அன்று கோலா-கலமாக நடைபெற்றது.








# சிவபூமி முதியோர் இல்லத்தின் 17வது ஆண்டு நிறைவு விழா

தொல்புரத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் நடைபெற்ற சிவபூமி முதியோர் இல்லத்தின் 17வது ஆண்டு நிறைவு விழாவிற்கு செஞ்சொற்செல்வர் தலைமை தாங்கினார். ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், நல்லை ஆதின முதல்வர், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் உட்பட்ட பல விருந்தினர்களும் பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் நிகழ்வில் சிறப்புரையாற்றிய செஞ்சொஞ்செல்வர் அவர்கள் கடந்த 17 ஆண்டுகளில் சிவபூமி முதியோர் இல்லம் கடந்து வந்த கடினமான பயணம் பற்றி மிகவும் தெளிவாக பல கருத்துக்களை தெரிவித்தார். தற்பொழுது வரை 100ற்கும் அதிகமான முதியவர்கள் இந்த இல்லத்தில் இருந்து சிவபதம் அடைந்துள்ளார்கள். அவர்களில் அநேகமானர்களின் உறவினர்கள் இறுதிக் கடமைகளுக்கு வராத காரணத்தால், அவ் கடமைகளையும் தானே ஆற்றியதாக மிகவும் பெருமையுடன் தெரிவித்தார். தற்பொழுது 84 முதியவர்கள் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாக செஞ்சொஞ்செல்வர் தெரிவித்தார்.

ஆதரவற்ற நமது மூத்தோர்களுக்கு நாங்கள் எடுத்துள்ள இந்தப் பணி மிகவும் சவாலானது மட்டுமற்றி மிகவும் கடினமானதாக இருந்தாலும், பலரது ஒத்துழைப்புடன் நாங்கள் எங்கள் பணிகளை செவ்வனவே ஆற்றி வருவதாக செஞ்சொற்செல்வர் தெரிவித்தார். இங்கு முதியவர்கள் மட்டுமல்லாது



34 பசுக்களும் நாங்கள் வளர்த்து வருகின்றோம் இவ் பசுக்களும் இங்கு தங்கியுள்ள முதியவர்களும் ஒருவருக்கொருவர் நல்ல உறவுடன் பாசத்துடன் இருக்கின்றார்கள். எங்கள் இல்லம் சகல வழிகளிலும் நமது ஆதரவற்ற மூத்தேர்களுக்கு அடைக்கலமாக இருக்கின்றது என்பதில் நான் பெருமை கொள்வதாக செஞ்சொற்செல்வர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இவ் நிழ்வில் உரையாற்றிய விருந்தினர்கள் அனைவரும் எமது தேசத்திற்கு கிடைத்த பெரும் கொடையாகவே செஞ்சொற்செல்வரை நாங்கள் பார்ப்பதாக தெரிவித்தனர். அவருடைய இந்த சிறப்பான பணி பல வழிகளில் துன்பம் அடைந்துள்ள எங்கள் மக்களுக்கு பெரும் ஆறுதலாக இருப்பதுடன் நமது மக்களை நேசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் புது நம்பிக்கையினை தந்துள்ளதாக தெரிவித்தனர். அறப் பணிகளை மிகவும் சிறப்புற மேற்கொண்டு வரும் செஞ்சொற்செல்வருக்கு இறைவன் நல்ல தேக ஆரோக்கியத்தினையும் நீடித்த ஆயுளையும் வழங்க வேண்டும் என விருந்தினர்கள் பிரார்த்தித்துக் கொண்டனர். விருந்தினர்களின் உரைகளை தொடாந்து கலைநிகழ்வும் சிறப்புடன் நடைபெற்றது.










## இணுவில் காரைக்காலில் 17 நூற்றாண்டு நந்தி

படத்தில் காட்டப்பட்டுள்ள நந்தி இணுவில் காரைக்கால் சிவன் கோவிலுக்குரியது. யாழ்ப்பான மக்களின் சைவ வழிபாட்டின் தொண்மையினை, இது பிரதிபலிக்கின்றது. இந்த நந்தியின் தனிச் சிறப்பு என்னவெனில் இது மரத்தினால் செய்யப்பட்டதாகும்.



இணுவில் காரைக்கால் சிவனின் தொண்மையான வரலாறும் பழமையான வழிபாட்டு முறைகளும் யாழ்ப்பாணத்தில் சிவ வழிபாட்டின் மகத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. தற்காலத்தில் பலரும் அறிந்திராத பொக்கிஷங்களை இணுவில் காரைக்கால் சிவன் கோவிலின் வரலாறு கொண்டுள்ளது.

## மாவை கந்தனுக்கு மஹா கும்பாபிஷேகம்...

மாவைக் கந்தன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷே கம் வரும் 11.04.2025ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற திருவருள் கூடியுள்ளது.



04.04.2025ம் திகதி காலை 4.32 மணிக்கு கர்மாரம்பம் ஆரம்பமாகும். 07.04.2025ம் திகதி தொடக்கம் 10.04.2025ம் திகதி வரை எண்ணெய்க் காப்பு நடைபெறும்.


மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் தனது 65ஆவது வயதில் 08.04.2024 திங்கட்கிழமை அதிகாலை காலமானார். யாழ்ப்பாணம் - நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலை நிகழ்வொன்றில் வயலின் இசை வழங்கிக் கொண்டிருந்த நேரம் சுகவீனம் ஏற்பட்டு வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் மறுநாள் அதிகாலை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.



# தெல்லி நகர் அன்னைக்கு தங்க முலாம் பூசப்பட்ட கொடித்தம்ப அங்கிகள்



என்னை அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் அமைந்துள்ள அம்பாள் ஆலயத்திற்கு சொற்பொழிவு ஆற்ற அழைத்தார்கள். நான் அங்கு சென்று அந்த ஆலயத்திலே தங்க முலாம் பூசப்பட்ட கொடித்தம்பத்தினை பார்த்தவுடனே இது போல எங்கள் தெல்லிப்பழை துர்க்கா தேவிக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் ஓடத் தொடக்கியது, சொற்பொழிவு ஆற்றும் பொழுதுகள் எல்லாம் எனக்கு கொடித்தம்பம் பற்றிய காட்சிகளே என் கண் முன்னே வந்து சென்றது.

உரையாற்றி முடிந்த பின்னர் அந்த ஆலயத்தின் அறங்காவலர் அவர்களிடம் நீங்கள் எங்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்பாளின் படத்தினை வைத்துதானே இங்கே கோவில் கட்டியுள்ளீர்கள் எனவே எங்களுக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் என வேண்டுகோள் ஒன்றை முன் வைத்தேன். அவர் நான் ஏதோ சிறு உதவியை எதிர்பார்ப்பதாக நினைத்து சரி என்று பதில் சொன்னார். எங்கள் தெல்லிப்பழை துர்க்கா தேவிக்கும் இங்கு உள்ளது போல கொடித்தம்பம் ஒன்று செய்து தர வேண்டும் என கேட்க அதற்கு அவர் இதன் பெறுமதி மிக அதிகம் என பதில் சொன்னார்.

முடிவில் இலங்கை ரூபாவில் பல இலட்சங்கள் பெறுமதியான கொடித்தம்பம்பத்தினை அமைத்து தர அவர் சம்மதித்தார். அதன் பயனாக எங்கள் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்திலே கொழும்பை வந்தடைந்த கொடித்தம்ப அங்கிகள் எங்கள் தேவஸ்தானத்தை வந்தடைந்துள்ளது. சித்திரைப் புத்தாண்டு பிறந்த சுப நேரத்தில் இந்த தங்கமுலாம் பூசப்பட்ட கொடித்தம்ப அங்கிகள் நீண்ட நேரிய கொடித்தம்பத்திற்கு அணிவிக்கப்பட்டு அன்னைக்கு காணிக்கையாக்கப்பட்டன.



இவை அனைத்தும் மனிதர்களின் முயற்சிகளால் நடப்பதல்ல எல்லாம் அந்த அம்பாளின் திருவருளினால் நடைப்பவை என்று எண்ணுங்கள். மனிதன் என்ன நினைத்தாலும் தெய்வம் விரும்ப வேண்டும். தெய்வத்தின் அனுமதியின்றி இது போன்ற கருமங்கள் ஒருபோதும் நடைபெறாது. சின்ன மனம் படைத்த மனிதர்களாக எப்பொழுதும் குறைகளே வாழ்வில் தேடிக் கொண்டிருக்காமல் நிறைவைப் பற்றி எண்ணி பெரிய மனம் படைத்தவர்காய் வாழப் பழகுங்கள்.

நல்லதை நினையுங்கள் எங்கள் அம்பாள் நிச்சயம் நல்லவற்றை நிறைவேற்றித் தருவாள்.

**செஞ்சொற்செல்வர்,**
**கலாநிதி. ஆறு. திருமுருகன்**



# சீரணி அம்பாளின் மகோற்சவம்

நாகம் பூஜித்து வழிபட்ட சிறப்பிற்குரிய சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் உற்சவம் நிகழ்கிறது.






## கோணேச்சரம் அழிக்கப்பட்டு 400 வருடங்கள்

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டு 400 வது வருட நினைவேந்தல். 1624ம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பு நாளில் பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த போது போர்த்துக்கீசப் படைகள் உள் நுழைந்து ஆலயத்தினை சூறையாடி ஆலயத்தை இடித்து அழித்தனர்.




## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



சுன்னாகம், மயிலணி முத்துமாரி அறநெறிப் பாட-சாலையில் நீண்ட காலமாக மிருதங்கம், வாய்ப்பாட்டு கற்பித்து வந்த ஆசானும் பிரபல மிருதங்க வித்வானுமாகிய எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சு. வரதராஜசர்மா அவர்களின் திடீர் மறைவு கலையுலகிற்குப் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# யாரையும் எளிதாக நம்ப வேண்டாம்

மார்ட்டின் என்கிற ஒரு மனிதர் ஊர் ஊராக சென்று இசை வாசிப்பவர். அவர் ஒவ்வொரு ஊராக சென்று தன் இசை திறமையை மக்களுக்கு காட்டுவார். அவர்களும் இவருக்கு காசு கொடுப்பார். மார்ட்டின் எப்போதும் அந்த பணத்தை எல்லாம் தன்னுடைய பையில் போட்டு வைத்திருப்பார். அந்தப் பையை எப்போதும் அவர் தோளில் தான் இருக்கும். ஒருநாள் மார்ட்டின் தன் பையில் காசு போடு வதை திருடன் ஒருவன் பார்த்தான். எப்படியாவது அந்த பையை திருட வேண்டும் என்று திட்டம் போட ஆரம்பித்தான். ஒரு நாள் அந்தத் திருடன் மார்ட்டினிடம் சென்று “ஹலோ மார்ட்டின் நான் உங்களோட இசைக்கு அடிமை. உங்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.” என்றான்.

அதற்கு அந்த மார்ட்டின் சொன்னார், “இல்லை உன்னை வேலைக்கு வைத்து உனக்கு சம்பளம் கொடுக்க என்னிடம் காசு இல்லை” என்றார். அதற்கு அந்த திருடன் “இல்லை எனக்கு காசு எதுவும் வேண்டாம் நான் உங்களுக்கு வேலை செய்ய ஆசைப்படுகிறேன்” என்றான். அதற்கு மார்ட்டின் சம்மதித்தார். அவர் அந்த திருடனிடம் எல்லா பொருட்களையும் எடுத்துக் கொண்டு வரச் சொல்வார். ஆனால் எப்போதும் தன் பணப்பையை தன்னிடமே வைத்திருந்தார். அந்தத் திருடன் பணப்பையை திருட மிகவும் முயற்சி செய்தான் ஆனால் அவனால் அது முடியவில்லை.




ஒருநாள் இருவரும் நடந்து சென்று கொண்டிருக்கும்போது மகாராஜா வருவதை மார்டின் பார்த்து, அந்த திருடனிடம், “நான் மகாராஜாவுக்கு ஒரு இசை வாசிக்கப் போகிறேன் என்னுடைய இசையைக் கேட்டு அவர் எனக்கு நிறைய காசு கொடுப்பார்” என்றார். அந்தத் திருடன் மார்ட்டினிடம் சொன்னான், “ஆமாம் உங்களுடைய இசையை கேட்டால் மகாராஜா நிறையவே காசு கொடுப்பார். அதற்கு நீங்கள் ஏழை போல சென்று இசை வாசிக்கவேண்டும். உங்களிடம் இருக்கும் பையை என்னிடத்தில் கொடுத்துவிடுங்கள். உங்களிடம் அந்த பை இருப்பதை பார்த்தால் மகாராஜா அதில் நிறைய காசு இருக்கும் என்று நினைத்து விடுவார்” என்றான். மார்ட்டினும் அந்தத் திருடன் பேச்சை நம்பி பையை அவனிடம் கொடுத்துவிட்டு மகாராஜா முன்பு சென்று மகாராஜா, “நான் உங்களுக்கு ஒரு அழகான இசையை வாசிக்கப் போகிறேன்” என்று தன் இசையை வாசிக்க ஆரம்பித்தார்.

அதை முடித்த பிறகு மகாராஜா சொன்னார், “உன் இசை கேட்க மிகவும் நன்றாக உள்ளது இப்போது எனக்கு நிறைய வேலைகள் உள்ளது” என்று கூறினார். மகாராஜா தனக்கு எந்த காசும் கொடுக்காததை எண்ணி ஏமாற்றத்துடன் திரும்பிய மார்ட்டினுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த திருடன் தன்னுடைய பையை எடுத்துக் கொண்டு தன்னை ஏமாற்றிவிட்டு தப்பி ஓடுவதைப் பார்த்தார். அப்போதுதான் அவருக்கு தான் ஏமாற்றப்பட்டது புரிந்தது. அவரால் அவனை பிடிக்க முடியவில்லை. அவர் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த காசை இழந்ததை நினைத்து மிகவும் வருத்தமுற்றார். அப்போதுதான் அவர் முடிவெடுத்தார் இனிமேல் முன் பின் தெரியாத யாரையும் நம்பவே கூடாது என்று.



# "வரலாற்றில் காரைநகர்" நூல் வெளியீட்டு விழா

திரு. சதாசிவம் ஆசிரியர் எழுதிய வரலாற்றில் காரைநகர் நூல் வெளியீட்டு விழா 31-03-2024 அன்று இடம்பெற்றது.













# கருங்கல்லில் திருக்குறள்

சிவபூமி திருக்குறள் வளாகத் திருப்பணி வேலை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக 1330 திருக்குறள்களும் கருங்கல்லில் பதிவு செய்யும் வேலை பூர்த்தியாகி உள்ளது.



# உலகம் வியக்க நடந்த துர்க்கையம்மன் மஹா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மிகப் பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்டு, அண்மையில் பங்குனி உத்திர திருநாளில் கும்பாபிஷேகம் கண்டிருக்கிறது. இந்த ஆலய புனருத்தாரணத்தை அளவீட்டுப் பரிமாணத்தில் பார்த்தால் நீளத்தில் அதிகமாகி இருக்கிறது. அகலத்தில் அதிகமாகி இருக்கிறது. உயரத்திலும் அதிகமாகி இருக்கிறது. அரசர் காலத்தில் தான் ஆலயங்கள் கருங்கல்லால் கட்டப்படும். ஆனால் அவற்றிற்கும் பல்லாண்டுகள் எடுக்கும். இராஜ இராஜ சோழன் தொடங்கிய ஆலய நிர்மாணத்தை மகன் இராஜேந்திர சோழன் வந்துதான் பூரணப்படுத்த முடிந்தது. அதுதான் இன்றுவரை அதிசயங்களுக்குள் அகப்படாத அதிசயமாக தஞ்சையில் நிமிர்ந்து நிற்கும் பெருவுடையார் திருக்கோவில். ஆனால் பாலஸ்தாபனம் செய்து அண்ணளவாக ஆறே மாதங்களில் இந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கும்பாபிஷேகம் நிறைவடைந்திருக்கிறது என்றால் இந்த இதனை சாதாரண விடயமாக கடந்து செல்ல முடியாது.

ஆலய உட்பிரகாரத்தின் நிலம் மற்றும் கருவறை முழுவதும் கருங்கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உள் வீதி சுற்று மதில்கள் உடைக்கப்பட்டு உள் வீதி அகலமாக்கப்பட்டுள்ளது. கூரை முழுவதும் கழட்டப்பட்டு, உறுதியான புதிய கூரை போடப்பட்டுள்ளது. அபிராமி அந்தாதி பாடல்கள் யாவும் கருங்கல்லில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பழைய தூண்கள் யாவும் இடிக்கப்பட்டு பொறியியல் ரீதியில் உறுதியான புதிய தூண்கள் அழகியல் வேலைப் பாடுகளுடன் நிர்மாதெய்வீகத் திருத்தலங்களின் புகைப்படங்களும், ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய சம்பவங்களின் படங்களும் பிரமாண்டமான முறையில் உட்புற சுற்றுச் சுவரில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வசந்த மண்டபமும் அகலமாக்கப் பட்டுள்ளது. பஞ்ச கோபுரங்கள் உட்பட ஆலயம் முழுவதும் புது வர்ணம் பூசும் வேலைகளும் நடைபெறுகின்றன. அழகிய மின் விளக்குகள் ஆலயத்தின் அழகியல் வேலைப்பாடுகளை மேலும் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு பல்வேறு கலைநயம் மிக்க வேலைப்பாடுகளுடன் காலம் தாண்டி நிலைபெறுமாறு கருங்கற்களாலும் அழகியல் ததும்ப இந்த ஆலயம் ஆறே மாதங்களில் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதை நினைக்கும் போது ஆச்சரியங்களால் சித்தம் நிரம்புகிறது. எத்தனை பெரிய கைங்கரியம். இந்த வரலாற்று சம்பவம் நடந்த காலப்பகுதியில் நாமும் வாழ்ந்தோம், இத் திருப்பணிகளை நேரில் கண்டோம் என்பதே பெரும் பாக்கியம். இது தலை முறை கடந்து தொடரும் பெரும் புண்ணியம்.













# இந்து இளைஞன் வெளியிடப்பட்டது..!

யாழ் இந்துக்கல்லூரியின் சிறப்புக்களைத் தாங்கி பல வருடங்களாக தொடர்ச்சியாக வெளியிடப்படும் இந்து இளைஞன் நூல் இந்துக் கல்லூரியின் வரலாறுகளைத் தாங்கிய நிற்கும் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம் ஆகும். தவிர்க்க முடியாத காரணங்களால் சில வருடங்களாக வெளிவராத இந்த நூல் இவ்வருடம் மீண்டும் வெளிவர ஆரம்பித்துள்ளது. அதன் வெளியீட்டு விழா இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் மிகச் சிறப்பாக 04.04.2024 அன்று நடைபெற்றது.




# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த பொங்கல் விழா

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பங்குனி கடைசி செவ்வாய்க்கிழமை வருடாந்த பொங்கல் கடந்த 09.04.2024 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய பொங்கல் உற்சவத்தினை தொடர்ந்து காலை 6.30 மணிக்கு தேவஸ்தானத்தின் தலைவர் இந்த பொங்கல் உற்சவத்தின் மகத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார். ஆலயத்தின் பெரிய வெளி வீதி எங்கும் அடியவர்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளை காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக மேற்கொண்டனர்.







# மருதடியானின் வருடாந்த மகோற்சவம்




யாழ்ப்பாணம்,மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவில் கொடியேற்றம் 22.03.2024 அன்று பக்திபூர்வமாக ஆரம்பமாகியது. இலங்கைத் தீவின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவு பக்தர்கள் விநாயகப் பெருமானை நேரில் தரிசித்து மெய்யுருக வழிபட்டார்கள். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சப்பைரதத்தகற்கான வெள்ளோட்ட நிகழ்வும் இடம்பெற்று ஆனைமுகன் 13.04.2024 அன்று புதிய சப்பை இரதத்திலே திருவீதியுலா வந்தமையும் குறிப்பிடத்தக்கது. மறுநாள் காலை இரதோற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.














ISBN-978-955-7420-00-4